

ஓலை 155| ஓசை 278| ஜனவரி 2026

# அகர முதல இலக்கியப் பேரவை



## தமிழறிஞர் கார்மேகக் கோனார்

## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்

## பொருள்

ஒழுக்கமே எல்லார்க்கும் மேன்மையைத் தருவதாக இருப்பதால், அந்த ஒழுக்கமே உயிரை விடச் சிறந்ததாகப் போற்றப்படும்.

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

அலுவலக முகவரி



97, குஞ்சிதபாதம் நகர்,
டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.


# அகர முதல இலக்கியப் பேரவை


Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## கோட்செவிக் குறளை காற்றுடன் நெருப்பு!

### நேரிசைக் கட்டளைக் கலிப்பா




மேகம் தென்றலின் வேட்கையால் மாரியாய்
மேன்மை பிள்ளையை மாண்புடன் பெற்றிடும்
மேகம் பற்றியே மின்னலும் கோளுமே
மின்னி மூட்டிட விண்ணுமே கேட்டதால்
காகம் போலவே கூக்குர லிட்டிட
கானில் பற்றிய தீயென காற்றினில்
போகத் தீவினை யானதே யாவுமே;
பொல்லாக் கோளுமே மூட்டலும் தீதுவே!

பகலின் காதினில் மின்மினி, நிலவைப்
பதமாய்க் கோளுமே மூட்டிட மண்ணிலே
முகமும் சீர்மையும் அற்றுமே போகுமோ?
முழுக்க மூடியே மூலையின் தன்னிலே
அகமும் பேரொளிப் பெற்றிடும் நல்லவர்
அலறி யென்றுமே அன்பரும் துன்புறார்;
நகமும் ஒட்டிய தோலென தீயுடன்
நகரும் காற்றினால் தீதிலை காண்பிரே!




உடலில் கோடியாய் வாய்களும் கொண்டுமே
உலகின் எங்கெலாம் கோள்களும் கூறிட
உடலில் கோடியாய்க் காதுகள் கொண்டுமே
உறுப்பும் கேட்பதால் தீயுடன் காற்றுமே
படர்ந்த போதினில் செல்வமும் ஆளுமை
பதமாய்ச் சேர்ந்திட கோள்களும் மூட்டினோர்
முடங்கிப் போவரே; நல்வினை தன்னையே
முடக்க ஆகுமோ தீவினை தன்னிலே!

**இலக்கணக் குறிப்பு:**
நேரசையில் தொடங்கினால் அரையடிக்குப் பதினொன்று எழுத்துகள்,
நிரையசையில் தொடங்கினால் அரையடிக்குப் பன்னிரண்டு எழுத்துகள் என்று,
ஒற்று நீக்கி எண்ணல் வேண்டும்

வாய்பாடு: மா, விளம், விளம், விளம்.

திரு நெருப்பலைப் பாவலர் இராம. இளங்கோவன்

# பெண்


பாவகை : கலித்துறை

1. தண்மை விரும்பித் தனித்தே சிறக்கத் தவறாள்
பெண்மை நிறைத்தே பெருமை வழியப் பெறுவாள்
வண்மை உடையாள் வலிந்தே உதவ வருவாள்
ஒண்ணல் மிகுத்தே ஒதுக்கம் நயந்தே ஒளிர்வாள்.



2. கண்ணாய் இருந்தே கடுமை ஒதுக்கிக் களிப்பாள்.
மண்ணின் அருமை மனதில் நிரப்பி மகிழ்வாள்.
உண்மை வழியை உணர நடந்தே உகைப்பாள்.
ஒண்மை நெறியில் ஒடுங்கி விரும்பி உயர்வாள்

3. அண்டை வசிப்போர் அணையப் புரந்தே அலைவாள்
சண்டை நடக்கச் சதிரக் கனன்றே சபிப்பாள்
இண்டர் நடுவே இதமாய்க் கழறி இணைவாள்
திண்மை நிறைத்தே திரண்டே நல்வழி திரிவாள்.



கவிஞர் செ. கலைவாணி

# சராசரி ஜீவன்களின்



ஆழ்மனது ஞாபகங்களை
வேர்வரை அழிக்கும்
துரோகக் கரையான்கள்.
பஞ்சபூதங்கள் அனைத்தையும்
அடையாளமின்றித் தின்றிடும்.

புகையென ஜாடை
காட்டித் திரியும்
கள்ளம் நிறைந்த மேகங்கள்
மழையென்ற ஒன்றுக்கு
தீர்ப்பெழுதாது.

நேற்றின் மடியில்
இன்று அமர்ந்திருப்பதை
மறுப்பினும்
அதன் மறுமுகத்தை
புறம் காட்டாத விழையும்
நாளையின் மனம்.

உண்மையை உரக்கச் சொல்லும்
நட்சத்திர புள்ளிகள் நிறைந்த
அகண்ட அண்டத்தில்
எதையெதையோ
தேடிக் கொண்டிருக்கையில்
பொசுக்கென விடிகிறது
கிழக்கு.

அந்த நிசப்த இருள்முடிச்சில்
நிகழ்ந்து முடிந்தவை
எத்தனை எத்தனையோ.
ஆயினும்
என்னுடையது அப்படியொன்றும்
பெரிய செய்தியில்லை.

நீளிரவின் கரு உடைத்து
பகல் தேடிவந்த
பல சராசரி ஜீவன்களில்
நானும் ஒருவன்.

கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

திருவுடன் பரமிணைந்து அதனுடன்குன்றம் இணைந்தது
திருப்பரங்குன்றம் எனத்திருப்பெயர் தாங்கி நிற்கின்றது;
திருப்பரங்குன்றம் எந்தன்சொந்த வூராம்மதுரை யிலிருந்தும்
திருமலைக்குமரன் யானோவதன் வரலாறைமுழு வதுமறிந்தேனிலை!

திருமுருகக் கடவுளின்முதலாம் படைவீடு
திருப்பரங்குன்றம்;படைவீடுதிருப் பரங்குன்றமது
தெய்வானையை, சூரனைவதைத்த வெற்றியாளன் வீராதிவீரன்
திருமுருகனாய் ஓருரு கொண்ட ஆறுமுகன்
திருமணம்செய்த திருத்தலமென்பதை அறிந்தவன் அடியேன்!

திருவிளையாடற் புராணமென்ற வொருபுராணத்தில் ஏழையந்தணன்,
தருமியென்ற நற்றமிழ்ப்பாவலன் சொக்கநாதரைத் தொட்டுப்பூசிக்கத்
திருமணம்முடித்தவ னாயிருக்கவேண்டும் என்பதுவின்றி யமையாதகுதி;
திருமணம்முடிக்க தருமிக்குப்பணம் கிடைக்கவுதவிட வந்தான்

திருவிளையாடற் நாயகன்சொக்கன் புலவன்கோலம் பூண்டு;
தமிழைக்காத்திட சங்கப்புலவன் நக்கீரன்வந்திருப் பதுவிறைவனென
தெரிந்தும் நெற்றிக்கண் திறப்பினும்குற்றம் குற்றமேயென்றிட
தெப்பத்திற்குள் சாம்பலாயடங்கிட நெற்றிக்கண்ணால் எரித்தானீசன்!



தாங்கவொன்னா துயர்கொண்ட பாண்டியனின் வேண்டுதலால்
தன்னுடலும் இன்னுயிரும் திரும்பக் கிடைக்கப்பட்டு
தலைக்கணம் அற்றுவருமைத் தமிழ்ப்புலவன் எழுந்தானாயினும்
தன்வயிற்றில் வலிவரக்கண்டு அதுபோக்க காளஹஸ்த்திக்கு

தனிப்பயணம் மேற்கொள்ளும் வேளைபரங்குன் றத்தில்சிவத்தைத்
தியானித்து பூசிக்கவியலா தடுமாறிட சிவபூதமொன்று
தவறிழைத்த நக்கீரனை பரங்குன்றத்தில் சிறைப்படுத்த
தன்னோடுசிறை பட்டார்தம்மைக் காப்பாற்ற நக்கீரர்
திருமுருகாற்றுப் படைபாடிட பாவலன்வடிவில் ஆங்குவந்து
தமிழமுது பருகிதான்யாரெனக் காட்டிவேல்கொண்டு குகைப்பிளந்து
தண்ணருள் செய்தகதை அறிவேன் அடியவனே!

சிவனேகுன்றா யிருக்கும்வம்மலைக் குப்பெயர்கள்பல
சங்கத்தமிழில் சிந்திக்கிடத்தலால் பரங்குன்றமெமது குன்றமே!

கவிஞர் தீந்தமிழ் திருமலைக்குமரன் அருணாச்சலம், கோவில்பட்டி

அமைதி யிழந்த ஆர்கலி
அச்சம் தந்த விடியல்
அழுகை மொழி உதிர
அசைவிழந்த நிலம்.
ஆழிப்பேரலை விழுங்கிய
பொழுதுகள்.




கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ்நாடு

அகர முதல

நாளையென்று
ஒன்றில்லையென்று
இன்றே அத்தனை
காதலையும்
கொட்டித்தீர்த்து விடு.

விடிந்து விட்டால்
அன்பே,
மீண்டும் மீண்டும்
அதையே
விடாமல் அமுல்படுத்து!



கவிஞர் மரு ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

# கவிதையின் நாயகியே



மயங்க வைத்த
மரகத வீணையே
விண்மீனின் ஒளியாய்
வானில் மிளிர்பவளே

முழுமதியான முகவடிவே
முப்பொழுதும் உன்னினைவுகளே
கற்பனை ஊற்றெடுக்கும்
காரிகையின் வனப்பிலே

கவிதையின் நாயகியே
காதல் தேவதையே
கொடியிடையில் மையலானேன்
கொஞ்சிடும் கிளியானேன்

இளந்தென்றலாய் வீசியே
இதயத்தை வருடுகிறாயே
எழிலான ஏந்திழையே
என்னுள் நுழைந்தாயே

எண்ணங்கள் சிறகடிக்கும்
தன்னிலை மறந்தே
ஓயாத நினைவலைகளில்
ஓராயிரம் கனவுகளே

வடிவழகில் வசியமாகியே
வசமானேன் உன்னிடமே
கார்குழல் காற்றிலாட
காந்தமாய் ஈர்த்தாயே

மயங்க வைத்த
மரகத வீணையே
மாசில்லா அன்பில்
மனதும் மகிழ்வானதே

ஆசைகள் துளிர்த்திட
ஆனந்தம் பெருகிடுதே
கனிவாய் வந்துவிடு
கன்னத்தில் முத்திரையிடு

வரமொன்று தாராயோ
வாழ்வும் வளமாகிடவே

கவிஞர் ப. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# நெஞ்சொடு புலத்தல்



என்நெஞ்சே நமைநினையா
என்னவனை இன்றளவும்.
நாம்மட்டும் நினைந்து
உருகிடல் முறையோ?

என்நெஞ்சே என்னவன்
அன்பிலாதவன் என்றறிந்தும்.
அவன்பின் செல்வதுபோல்
அறியாமை வேறுண்டோ?

என்நெஞ்சே அன்பில்லா
என்னவன்பின் செல்கிறாயே.
துன்பத்திலழிந்தார்க்கு நண்பராய்
எவருமிலை என்பதாலா?

என்நெஞ்சே என்னவனை
ஊடல்கொண்டபின் அவனொடு.
கூடலாமென் றெண்ணிடாதே
உனைத்தேட அவனில்லையே.

என்னவனைக் காணாமல்
துன்புறும் என்மனம்.
கண்டிட்டால் பிரிவானோ
என்றெண்ணியும் துன்புறுதே.

என்னவனைப் பிரிந்திருக்கையில்
அவன்பிழை நினைந்து.
என்நெஞ்சமே என்னை
தின்னும் துன்பமடைகிறேனே.

ஒருநிலையில் நில்லாத
அறிவில்லா என்மனதுடன்.
நாணத்தையும் கூடவே
நான் கைவிட்டேனே.

பிரிந்தவனை இகழ்ந்திடில்
நமக்கே அவமானமே.
அவர்பெருமை காண்பதுவே
காதலுக்கு அழகே.

துன்பத்தில் துணைநின்று
அதைநீக்கி இன்பமுறுதல்.
நாமேயன்றி வேறாரும்
துணையில்லையே என்நெஞ்சே.

நம்மனமே துணையென
இல்லையென் றானபோது.
நம்மவன் நம்மொடு
அன்பிலாதிருத்தல் இயல்பே.

கவிஞர் ஆன்றனி ஜமுனா, நாகர்கோவில்

# சத்தியத்தின் வாழ்வு

பொன் பொருள் புகழ் மீது
ஆசை என்னும் தீயப்பழக்கம்
அதீதமாய் பெருகி வந்தால்
நட்பு பாசம் அன்பெல்லாம்
"கானல் நீராய்" நீர்த்து விடும்.

பேராசை என்னும் பெருந்"தீ"
உள்ளத்திலே நுழைந்திட்டால்
கருணை என்னும் தெய்வ குணம்
காணாமல் போய்விடும்.

அறம் சார்ந்த நல்ல செயல்
வாழ்வியலின் "விதையே"
நல்லொழுக்க வாழ்வின்
வேரும் விளைச்சலமாய்
பலன் தந்து புகழ் சேர்க்கும்.

பொறுமையை பெருமையாகவும்
ஒழுக்கத்தை உயிராகவும்
சர்ச்சைகள் என்னும் சாக்கடையும்
சாதூர்யமாய் கடப்பவனே
வெற்றி என்னும் இலக்கை
வெல்லும் நல்ல நேரமே.

சத்திய வாழ்விலே
சோதனை நூறு ஆனாலும்
தர்மத்தின் வெற்றி சத்தியத்தின் பக்கமே
சத்திய வாழ்வே நம்மை
சான்றோனாக்கும் மாமருந்து.



கவிஞர் ஜேப்பி@பன்னீர்செல்வம், சேத்தியாதோப்பு

# வசந்த காலம்

பெற்றோரின் கரங்களில்
உலகம் கண்டு

நண்பர்களுடன் வீதிகளில்
மகிழ்ச்சியில் தொலைந்து

உறவுகளுடன் உற்சாகமாய்
திருவிழாக்கள் கண்டு

தாவணி பெண்களின்
முகங்கள் தேடி

கடிதங்கள் சுமக்கும்
தபால்காரரை தெய்வமாக்கி

மாலை நேரங்களில்
திண்ணைகளோடு பேசிய

வசந்த காலங்கள்
காணமல் போய்

இணையத்தின் அரவணைப்பில்
மனிதம் மந்தைகளாய்



கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

காடு அமைதியாக இருந்தால்
காற்று இல்லை என்று அர்த்தம்.
***

கடல் அமைதியாக இருந்தால்
அலை இல்லை என்று அர்த்தம்.
***

மனம் அமைதியாக இருந்தால்
வலி இல்லை என்று அர்த்தம்.
***

மௌனம் அதிகமானால் சொல்ல முடியாத
உணர்வு உள்ளது என்று அர்த்தம்.
***

சிரிப்பு மறைந்தால் உள்ளம்
அழுகிறது என்று அர்த்தம்.
***

நண்பன் தொலைந்தால் நினைவுகள்
வாழ்கின்றன என்று அர்த்தம்.



கவிஞர் செல்லத்துரை கிருஷ்ணகுமார், களுதாவளை (இலங்கை)

# மனிதம் காக்கும் மகத்துவம்



உலகமே இருண்டாலும்
ஒளி வீடாய் காட்சியளிக்கும்
புகழ் பெற்ற மனிதர் இறந்தாலும் பேசப்படும்
தன்னிடம் இல்லையன தெரிந்தும்
கொடுக்க முன் வரும்
தன்னை பற்றி சிந்திக்காமல்
பிறர்க்கு உதவிட ஆசைப்படும்
தனக்கென்ற இடத்தை விட்டு கொடுக்கும்
பார்த்து பழகிய உறவுகளை விட
காணாமல் உரையாடியவர்க்கு
உள்ளம் துடிக்கும்
தான் என்ற கர்வத்துடன் வாழும்
இவ்வுலகில் தன்னடக்கமாக இருக்கும்
எல்லாமே இருந்தாலும்
இல்லாதவர்களை பழித்து பேசாது
தன்னோட பெருமையை
தானே விளம்பரப்படுத்தாது
சிறியவர், பெரியவர் என்ற
பாகுபாடு இல்லாமல்
பாசமழையை கொட்டும்
மனிதநேயத்தை போற்றுவோம்
வாழ்வில் வெற்றி பெறுவோம்
உயிருக்குள்ளே மனிதாபிமானம் வாழ்கிறது.

கவிஞர் மோனீஷா

# மனந்தடுமாறேல்

உலகம் உரிமத்தின்
உன்னதங்களை பகுத்திட
உள்வாங்கி சிற்றின்ப
பேரின்ப வசியங்களில்.

வளரும் தீமைச்
செடியினைக் களைந்தே.
மலரும் பூவின்
மணமும் உணர்ந்தே.

மகிழ்வை நினைத்து
மனம் கொத்திடாதே.
ஊஞ்சலாடும் இதயத்தினை
தட்டிக் கொண்டாடிடு.

கடமைகள் கடலலையாய்
கண்முன் மலையாகிட.
சுவடுகள் எல்லாம்
நேர்மறையில் கண்டிடு.

ஒற்றுமை வேள்வியிலே
ஒழுக்கம் ஒளிர்ந்திட.
சூரியனின் உதயமாய்
மனமும் விரியட்டுமே.



கவிஞர் இராஜகை நிலவன், மும்பை

# இனிதே துவங்கும் நாள்

காலை புலர்ந்ததும்
கண்ணாடி தேடி
கண்ணில் ஒத்தி
காலை வணக்கம்
முதியவர் குழுவில்.
ஒரு முறைமை
விசாரிப்பை தவிர்த்தாயிற்று.
செவி கருவியை
செவியில் செலுத்தி,
பிறந்த மக்களுக்கு
'நலம்' சொல்லியாயிற்று.
கால்களை மெதுவே
முழுகாலணி உறைகளில்
நுழைத்து, நடப்பானை நகர்த்தி
நாலு அடி எடுத்து வைக்க;
வியர்வை ஆறாம் பெருகி
அருவியாய் பொங்கி வர;
நடப்பதுதான் வாழ்வா?
வாழ்வை நான் நடத்துகிறேனா?
வாழ்க்கை என்னை நடத்துகிறதா?
என்பதில் குழம்பினேன்.
'என்னடா வாழ்க்கை இது;'
மனம் அலுக்க,
கண்ணில் நீர் சோர;
சமையல் சுப்புலட்சுமியும்
மேல் வேலை மீனாவும்
வருவார்களா,
மட்டம் போடுவார்களா;
என்ற மெல்லிய கவலையில்
வீடு தந்து சேர,வாயிலில்
மகனும் மருமகளும்
காத்திருப்பது கண்டு
இனிதே துவங்கியது
இந்நாள்.



கவிஞர் சசிகலா விஸ்வநாதன்

# நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு

தேடுகின்ற நிதியெலாம் தேய்ந்திடும் நிலவாக!
நாடுகின்ற நூலறிவோ வளர்த்திடும் கதிராக!
எண்ணியது யாவையும் ஏற்றமாக்க நூல்கள்!
நண்ணுமே வாகையும் நலமுறவேநீ கல்!

அறிவின் வலிமைதான் ஆளுமைத் தன்மை
அறியாமை இழிவை அழித்திடும் உண்மை!
விழிப்புணர்வும் செயலுக்காய் விரைந்தத் திறனும்
விசாலமாக்கும் பார்வையால் வையத்தை ஆளும்!

எழுத்தை வாசிப்பது எண்ணத்தில் நிறுத்தவே
முழுதாய் வாசித்து முன்னுதாரணம் ஆகவே!
வாழ்க்கைக் கட்டமைப்பு வாசிப்பில் நிகழும்!
வாழ்வின் முழுமைக்கும் வழியாக்கித் திகழும்!


படைக்கும் ஆக்கத்திற்குப் படிகளைக் கட்டியே
விடைதரும் சிந்தனைக்கு விருத்தியாக விரியும்!
திண்ணிய நெஞ்சத்திற்குத் திறவுகோல் நூல்கள்!
விண்ணே வரையறை விளிம்பே விரல்நுனியில்!

அறந்தனை விதைக்கும் அகந்தனை உயர்த்தும்
மறந்தனை வளர்க்கும் மலர்ச்சியைக் கொடுக்கும்
வாசிக்கும் நூல்களே வார்த்தெடுக்கும் நம்மை
நேசித்த நண்பனாய் நிலைத்திடும் தன்மை!

புறத்தே தள்ளாது புரியாததை விளக்கிடும்
திறத்தைத் தூண்டவே திரையை விலக்கும்!
மொழியின் வளத்தில் மோழையும் மீள்வார்!
பொழியும் மழையாய் பொய்யாது ஒழுகுவார்!

நூலறிவு உள்ளோருக்கு நுண்புழையும் வெளிச்சம்!
நூலாலே உருவாகும் நுண்ணறிவு விழுதுகளும்!
வேலாகக் கூர்மையும் விரைவோடு விவேகமும்
சூலாக்கும் அறிவுக்கரு சூத்திரமே நூற்கருவாம்!

இதுதான் வாழ்வென இறவாப் புகழென
முதுமொழி செப்பும் மூவாத் தமிழென
காலத்தில் நிறுத்தும் கற்றறிந்த நூற்தரம்!
நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு நல்வரம்!



கவிஞர் மாலதி இராமலிங்கம், புதுச்சேரி

# புதிதாய் அழைக்கிறது புது வருஷம்




வரும்போது கூறுவர் புதிது புதிது
புதிதே பழையதாகிவிடும்
நாட்களை தொலைத்துக் கொண்டு
நாட்களை எண்ணியபடி வாழ்வில்!

புதுவருஷம் வந்தாச்சு
புத்தாடையும் எடுத்தாச்சு
புரியா வயதில் யாவும்
பூரிப்போடு கைவிசேடம் வாங்க!

நாட்கள் நகர்கின்றன
நள்ளிரவு கூட
நாட்காட்டி சரியாய் காட்டி நிற்கும்
நாட்காட்டி அழும் சத்தம் கேட்டு!

பழையன கழிய
புதியன புகுதல் வழமையே
வரும் ஆண்டு ஆட்டம் போடுமா?
வாட்டிப் போடுமா?

எதிர்பார்க்கிறேன் நான்
நான் இல்லை யாவரும்தான்
பிரார்த்தனகள் ஆலயங்களில் ஒலிக்கும்
பட்டாசுகள் வானில் வெடிக்கும்!

இன மத சாதி பால் மறக்க
இறைவன் பாதம் நாடுவர்
இனிதே வாழ்வில் அருள்புரிவாயென
இதயத்தில் வேண்டி நிற்பர்!

கண்முழித்து காத்திருப்பேன் உனக்கு
எனக்கு நீ தருவதென்ன?
இன்பம் நிம்மதி இவையே போதுமே
இன்னல் துன்பம் வேண்டாமே!

நாட்காட்டி
ஏழையாகி மெலிந்து
உருக்குலைந்து செல்ல
மானிடா உன்னில் மாற்றம் கண்டு
மங்கிடா வெள்ளியாய்
மண்ணில் நீ புதிதாய் பூக்க வேண்டும்!

கவிஞர் திருமதி. ஜுவனீற்றா கிங்ஸ்லி, கல்முனை(இலங்கை)

ஆயிரம் வலிகள்;
அத்தனை வடுக்கள்!
ஆறாத ஏக்கங்களாக;
ஆற்றலின் தேற்றல்கள்!

தீர்ந்தவை சில!
தேர்ந்தவை பல!
மிச்சமுள்ளவை படர;
மீதமுள்ளன வழிகள்!

அவ்வழியே புத்தாண்டு
எவ்வழியிலும் தீரட்டுமே!
பூமியோ சுழல்கிறது;
பூதுலோகம் பிறக்கிறது!

ஆங்கிலப் புத்தாண்டோ
அருமையான ஆண்டாக
இனிமையாக மலரட்டும்!
இன்பமாகவே கழியட்டும்!

பூக்கும் சிந்தனைகள்;
புத்துணர்வு பெறட்டும்!
கடந்த அனுபவங்களோ
கடைசிவரை இருக்கட்டும்!

பாடமாக எடுத்து;
படமே பண்ணலாம்!
சீரான வேகமுடன்;
சீர்மிக ஒளிர்வோம்!

பாடாவதி நண்பர்களை
படாதபாடு படுத்துவோம்!
துரோகி ஆனவர்களை
துட்சமாக மதிப்போமே!



வழிதேடி அலையாமல்
கொண்டாடி மகிழ்வோம்!
பாவங்கள் கழியட்டும்;
புண்ணியம் பெருகட்டும்!

எல்லோரும் நலமுடனே
எல்லாம் பெற்றிடட்டும்!
ஆண்டவா! எங்களை
ஆராதித்து அருளப்பா!

கடவுளர்களே! எல்லோரையும்
காப்பாற்றி போற்றுங்களப்பா!
ஏசு அல்லா ஈசன் போற்றி
போற்றி போற்றி
பெரியோரே போற்றி!

நல்லாண்டாக 2026
நலமாக பிறக்கட்டும்!

கவிஞர் மீரா ஹுசைன், சென்னை

# கவனிக்கவும் வேண்டுமே





நடக்கும் பாதை
என்னவோ நேராகத்தான் இருந்தது
வளைந்து வளைந்து
சென்றதை பார்த்த நான்
அவசரகதியில் எண்ணிக்கொண்டேன்
சற்று மன பாதிப்பு இருக்குமோ

நேர்பாதையின் முடிவில்
ஆரம்பித்த சிறு வளைவு
எளிதாக புரியவைத்தது
அவள் அன்போடு திரும்பினாள்
கவனம் பெறவே என்று
உணராத தத்தியாகிப்போனேன்

கவிஞர் முனைவர். இரா. இராஜமோகன், அயன் குறிஞ்சிப்பாடி

# ஆங்கில புத்தாண்டை வரவேற்போம்




ஆங்கில புத்தாண்டு வருவது
வாழ்வில் மகிழ்ச்சியாம்
புத்தாண்டை வரவேற்று
வாழ்க்கை வண்ணமயமாய் மாற்றலாம்.
அழகான தீப ஒளியில் விளக்கேற்றி
இன் முகத்துடன் வரவேற்று
பார்!
உன் வாழ்க்கை ஒளிமயமாகும்.
மனதில் தீய எண்ணங்களை அழித்து
நல்ல எண்ணங்களை உருவாக்கி
மகிழ்ச்சியாய் நாள்தோறும் செயல்படுவோம்!

கவிஞர் மா. நந்தினி, சேலம்

# மார்கழி திங்கள்

மார்கழி திங்கள் வந்தது
குளிரில் மூடிய கால்கள்
வெதுவெதுப்பான காபியில்
அன்பை நுகரும் நாட்கள்

பனி மொய்த்த மலைகளில்
புது நம்பிக்கை வாசம்
மார்கழி திங்கள் வந்தது
இனிய நினைவுகள் தந்து

தமிழின் தைலாக
தைப்பொங்கல் நெருங்க
மார்கழி திங்கள் வந்தது
மகிழ்ச்சி தர நம்மிடம்

வயல்களில் விளைச்சல்
வானில் புது நிறைவு
மார்கழி திங்கள் வந்தது
வளம் தர நம் வீட்டில்

ஆண்டாள் நாச்சியார்
திருப்பாவை பாட
மார்கழி திங்கள் வந்தது
அன்பின் பெருக்கெட



கவிஞர் ஏ எம் முர்ஷிதா, அக்குறணை (இலங்கை)

பிறந்தது இன்று ஆங்கிலப் புத்தாண்டு!
இரண்டாயிரத்து இருபத்து ஆறாம் ஆண்டெனவே!
மாற்றங்களை வாழ்வில் காண்கின்றோம் ஆண்டுதோறும்!
நேற்றிருந்த நிலை இன்றில்லை மாற்றத்தால்!
சோர்வெனும் மேகம் விலகி, சுடரொளியால்
சுறுசுறுப்பு மலரட்டும்! முன்னேற்றப் பாதையில்
நடைபோட்டு, வெற்றியின் வாசல்தனை எட்டுவோம்!
கடந்த காலங்களின் கசப்புணர்வுகளை மறந்து
கிடைத்த அனுபவங்களால் தடைகளைத் தகர்த்து
தொடங்கிடுவோம் புதுவாழ்வை! அடைந்த வலிகள்
பாடங்களாய் அமையட்டும்! புதிய நாள்களில்
தொடரட்டும் புதுப்புது கனவுகள்! விடைகிடைக்க
தேடல்களில் தொடங்கி தடம் பதிப்போம்!
இடம் பிடிப்போம் சாதனை சரித்திரத்தில்!
நட்பும் உறவும் நற்றுணையாய்த் திகழட்டும்!
படிப்பறிவால், பட்டறிவால் மடமைகள் மறையட்டும்!
சட்டங்களை மதித்து சமுதாயப் பணிசெய்வோம்!
விட்டொழிப்போம் கெட்ட எண்ணங்களை1 நல்லவற்றை
நாடிடுவோம்! ஈட்டிடுவோம் நற்பெயரை! நாமுயர
நம்மால் நாடுயர நாளும் உழைத்திடுவோம்!
நடப்பதெல்லாம் நன்மைக்கே! தளராமல் முயன்றிடுவோம்!
இகழ்வோரை, ஏளனத்தை புறக்கணித்துப் புறந்தள்ளி
அகத்தில் நம்பிக்கை வீற்றிருக்க இடமளிப்போம்!
சிகரத்தை அடைய சிறுஅடிதான் துவக்கமன்றோ?
கடந்தவை மறந்து, வரவேற்போம் புத்தாண்டை!




கவிஞர் ஏ. சீ. சேஷாத்ரி



தோண்ட தோண்ட கவிதைகளை
அள்ளித் தரும் மணற்கேணி .
பாவப்பட்ட வர்க்கு
உன் பாடல்கள் கவி ஏணி.
சரணங்கள் சரணடையும்
உன்னிடத்தில் .
பல்லவி எல்லாம் பல்லக்கு தூக்கும்
உன் கவி தடத்தில்.
வாழ்க்கையை எழுதினாய்
பிறர் வாழ எழுதினாய்.
உனது எழுத்தானது எழுத்தல்ல
தமிழ் ஆபரணங்களை சுமந்த கழுத்து.
உனது சிந்தனைகள் களங்கம் அற்ற விளக்கம்.
திசையறியாதவர்க்கு
வழிகாட்டும் கலங்கரை விளக்கம்.
பாரதி நீ
பாருக்கெல்லாம் சாரதி.
இருளை மண்டியிட வைத்த ஞான விளக்கு .
வறுமை அன்றாடம் போட்டது உன் மேல் வழக்கு.
வறுமையையும் வென்றாய்
வார்த்தைகளால்.
உனை நோக்கி வந்த சிறுமையையும் சிதறடித்தாய்
சீரிய சிந்தனையால்.

கவிஞர் முனைவர். முனியாண்டி, திருவில்லிபுத்தூர்



பழையன கழிதலும்
புதியன புகுதலும்
காலம் காலமாகவே நடைபெறும்
ஒரு காலச்சக்கரமே!

புதுப்புனலாக புது வருடத்தை
நாம் கொண்டாடியே மகிழலாமே!
மனிதனின் பல முயற்சிகள்
சென்ற வருடத்தை காட்டிலும்
நல்ல முன்னேற்றத்தை தந்திடுமென்ற
நம்பிக்கையிலே காலத்தை ஓட்டுகிறான்.

பழைய வெள்ளத்தை புது வெள்ளம்
அடித்துக் கொண்டு போகுமே!
புது வருடம் பல முயற்சிகளில்
வெற்றியும் காணப்பெருமே !
வெற்றியும், தோல்வியும்
ஒரு மனிதனின் வாழ்வில் சகஜமே!

துன்பத்தைக் கண்டு துவளாமலும்
இன்பத்தைக் கண்டு மகிழாமலும்
நம் இலக்கை நோக்கி பயணிப்போமே!
நாளைய உலகம் நம் கையிலே!
இந்த புது வருடம் நமக்கானதே!

கவிஞர் அ. கிருஷ்ணவேணி, ஊத்தங்கரை

இப்படித்தான் போகுமென்று புரிந்திருந்தும்
இருந்திடவே செய்யும்
மனதை என்ன செய்வது?

அழகழகாய் பார்த்துப் பார்த்து
அணியமானது எல்லாம்
உன்னோடு ஐக்கியமாகிடவே
என்பதனை
இதைவிட எப்படிச் சொல்வது?

உனக்கென அமைந்தது
உனக்காக கிடைத்தது அனைத்தும்
கேள்விகளற்ற உலகத்தின் நீட்சி!
அந்தக் கேளிக்கை விருட்சத்தின் கிளை நீ!

ஆனால்

கற்றை மலரிருந்தும்;
கத்திச் சொல்லும் ஆசையிருந்தும்;
எறும்பின் ஓசையில்தானே
என்னியத் துடிப்பு
உலகில் அஞ்சலாகின்றது!

இருந்தும்

வினாக்களின் விலாவிலேறியே
என் விருப்பத்தின் அம்புகள்
எய்வதாலோ என்னவோ?
என் இலக்குகள் மட்டும்
தீப்பற்றிக் கொள்கையில்
எங்கிருந்து என் அம்பறாத்தூணியில்
எய்திட அம்புகள் இருக்கும்?



இது புரிந்து தானோ
பெண்ணைநோக்கி புனைகதைகள்
ஆண்டாண்டுகாலமாய் அணியமாகின்றது!

புரட்டும் புயலாய்
எழுந்திடும் ஆசைநெருப்பு
வானோக்கி எழுவதை
எப்படி மறுத்திட
என்னால் இயலும்?
ஒருநாள் உலகின் கொடிமரத்தில்
பெண்ணிய கீதம் முகவரியாகும்.

அந்நாள்வரையில்
அதுநாள்வரையில்
அக்னிக் குஞ்சாய்
உன்னை நெஞ்சில்
அடைகாத்திருப்பேன் அன்பே!

கவிஞர் யாழிசைசெல்வா, தேனி மாவட்டம்

# புத்தம் புதிய ஆண்டு

புத்தம் புதிய ஆண்டுதான்
பொலிவுடனே பிறக்குது.
புதுமைகள் பல கண்டிட
பாதையும்தான் தெரியுது.

பழையன கழிதலும் புதியன புகுதலும்
மாற்றம் என்னும் ஏற்றம் தான்
வாழ்வில் இனி வளமைதான்.

இருப்பவர் இல்லாதவர்
ஏற்றத்தாழ்வு இன்றியே
சகோதர வாழ்வாலே உறவாய்
மிளிர்கின்ற கருணை
மிகுந்த ஆண்டுதான்.

இயற்கையை போற்றியே
எந்நாளும் வாழ்ந்திடுவோம்.
இயற்கைக்கு கேடான
செயல்களை தவிர்த்திடுவோம்.
சக மனிதனும் உறவென்றே
போற்றிய வாழ்ந்திடுவோம்.

இனிய மனம் ஈகை குணம்
என்னாலும் நிலைக்கவே
ஆனந்த வாழ்வு அனைவருக்கும்
வழங்கும் நல்ல புத்தாண்டு.




புத்தம் புதிய ஆண்டுதான்
புதுமைகள் பல படைத்திடவே
ஒற்றுமையே உயர்வென
அன்பை போற்றி காத்திடுவோம்.

புத்தம் புது ஆண்டுதான்
புத்தொளி வீசவே
சாதனை பல படைத்தே
சரித்திரம் படைத்திடுவோம்.

கவிஞர் ஜேப்பி@ பன்னீர்செல்வம், சேத்தியாதோப்பு

கனவென்றே நினைத்தேன்
கண்ணுக்குள் பதியும் வரை
ஆசைக்கூடாரம் நிறைந்தது
மனமும் நிறைவில் மிதந்தது

என் மாளிக்கையில்
சிரிக்கின்ற பூக்களிடம்
பேசுகின்றேன் நித்தமும்
ஏதோ ஒரு திருப்தி

பூந்தோட்டமா தெரியாது
வண்ணத்துப் பூச்சிகள்
உலாவர என்தோட்டப் பூக்கள்
காத்திருப்பில் இதோ

மழைத்துளியோடு
தேன்துளி சுமந்து
பூரிக்கும் பொன்னார
புன்னகையில் பூக்கள்

பேசுகின்ற பொழுதெல்லாம்
மறுமொழி கூறும் தலையாட்டலில்
மனமாளிகை மகிழ்ச்சியில்
ததும்பிதான் போகிறது



கவிஞர் சுந்தரிபாஸ்கரன், திருப்பூண்டி (நாகப்பட்டினம்)

பிறந்தது புதுவருடம்
இழந்தது ஏராளம்
கசப்புகள் தாராளம்
கழிந்த வருடம்
பரிசாக பெற்றது
துணிவின் துணையோடு
துடிப்போடு செயல்படு
கைவிட்டது உனக்கானது அல்ல
இனிசேர்வது நிச்சயமாக
நல்லதாக உன்னை சேரும் என்ற
தன்னம்பிக்கையை
இறுதிமூச்சுவரை இழக்காதே
இழப்பின் பாடங்கள்
கூர்தீட்டும் உன் அறிவை
இனிமைகள் கைகூடும்
நடப்பாண்டில்
நம்பிக்கை தானே எல்லாமே




கவிஞர் ஞா. கோமதிதேவா, பண்ருட்டி

பூக்களின்
மதிப்பை
வாசனை தாண்டி
நிர்ணயிக்கின்றன
பண்டிகை நாட்கள்



கவிஞர் அன்னலட்சுமி சரவணன்

# தோள் சேர வா



அறிமுகமான சிநேகத்தில்
அன்பால் எனை ஆட்கொண்டு!
குளத்துநீரில் எறிந்த கல்லாய்
மனதில் சலனமெழுப்பினாய்!
காதலாய் பரிணமிக்குமென்று
கன்னி நான் காத்திருக்க!
நீயோ கானல் நீர் போல
கண்ணுக்கெட்டி என்
கைக்கெட்டாமல் தூரமாய்!
தொலைந்து போய் விட்டாய்!
எனை மறந்து போய் விட்டாய்!

கவிஞர் லதா சுப்ரமணியன், சென்னை

# வேர்களும் விழுதுகளும்



அந்த ஆலமரம் அபூர்வமானது
அதிகபட்சம் பெரும் அழகானது
வந்த திக்வா புயலால் இதுவும்
வதிவிடத்தை இழந்ததே!
***

கிளைகள் உடைந்து சிதறின
இலைகள் உதிர்ந்து பறந்தன
இளைப்பாறும் பட்சிகளின் வரவுகள் நின்றன
களைப்பாற வந்த கால்களும் மறந்தனவே!
***

ஈரம் தந்த மரம் இது!
இறைவன் தந்த வரம் இது!
பாரம் சுமந்த தரு இது - இங்கே
நேரம் வந்து சரிந்ததே!
***

ஊருக்கு உன்னத அடையாளம்
பேருக்குத் தக்க உதாரணம்
ஆருக்குத் தான் தெரியும்
ஆண்டவன் கட்டளைத் தீர்மானம்!
***

நிழலுக்கு இதுதானே நிலவுலக அதிசயம்
அழகாகக் குடைபிடித்தது குடை சாய்ந்ததே
வளவுக்கு இப்போது அழகில்லை
வாழ்வுக்கு வழங்கிய வரம் இல்லை!
***

இருந்தும் அசையா நம்பிக்கை இருக்கிறது - காரணம்
அடிமரம் இன்னும் இருக்கிறது
பருமரத்தை இழந்தாலும் நாம்
பசுமை இன்னும் அடியில் இருக்கிறதே!
***

ஆம்! அடியும் வேர்களும் உண்டு
அதன் விழுதுகள் தான் இல்லை
ஓம் என்னும் நம்பிக்கையை
ஓங்காரமாய் அது மீண்டும் தரும்!



கவிஞர் விவேகவெளி தமிழேந்திரன், வெல்லபதியான், (கிழக்கிலங்கை)

புன்னகை புரிந்திடு
புதுமை பல செய்திடு

புத்தகங்கள் வசம் நின்றிடு
புத்தாக்கம் பெற்றிடு

புது ஆண்டை வரவேற்றிடு
புத்தாண்டு நல்வாழ்த்துகள்




கவிஞர் இரா. கோமதி

# கடந்த பயணமும் பூக்கும் புதுவரவும்



வசந்தமாய் வந்து
வலியோடு போனது
நிசப்தம் இன்றி
நீங்கியது கனவே

கூடிய மகிழ்வும்
வேடிக்கை ஆனதே
நாடிய அன்பும்
நரகத்தைக் கொடுத்ததே

துன்பங்கள் துரத்தியே
துவண்டிட வைத்ததே
இன்பங்கள் காணாது
இதயம் தவித்ததே

கடந்த பயணமும்
கழிந்து போகட்டும்
பிறக்கவரும் புத்தாண்டு
புதுப்பொழிவாய் மலரட்டும்



தொலைந்தவை மறைய
தொட்டவை துளங்கட்டும்
நினைத்தது மலர்ந்து
நிம்மதி நிலைக்கட்டும்

நல்வரவு ஒளிமயமாய்
நாடெங்கும் ஒளிரட்டும்
வெற்றிகள் பலவந்து
வேதனைகள் அகலட்டும்

கவிஞர் கிருஷ் அபி, இலங்கை

## இதற்குப்போயா?



நேற்றைய
சந்தோஷங்களையும்
வருத்தங்களையும்
கவலையையும்

இன்றைய நிஜங்கள்
இதற்குப்போயா
இத்தனை ஆர்ப்பாட்டம்?
என கேலி செய்கின்றன

நாளைகளும்
இன்றைய நிஜங்களைப் பார்த்து
இதை கேலி செய்யும்

காரணங்களாய்
'அந்த கணத்தின் சூழ்நிலை'
'பெற்ற அனுபவம்'
'கிடைத்த மனப்பக்குவம்'

********

## அதை சொல்கையிலே

நம்பிக்கையாய்
கேட்கப்பட்ட உதவிக்கு
இல்லை என் கையில்

சாதகமாகும் என
எதிர்பார்க்கப்பட்டது
இல்லை என் கையில்

பிடித்தமான உணவு
வைத்திருந்தேன்
இப்பத்தான் கொடுத்தேன்
என் கையில்

காலதாமதமான
தவறான தகவல்
கொடுக்கப்பட்டும்
மன்னிக்கவும்
கேட்கப்படுகையில்

பேசிக்கொண்டே
இருந்தவர்
அவசர அழைப்பு
அப்புறம் பார்ப்போம்
என் கையில்

வெளியே
உதட்டு வார்த்தையாய்
பரவாயில்லை
உள்ளே
சொல்லில் அடங்கா
வருத்தம்.

கவிஞர் சுந்தரராஜன், மானாமதுரை

## கட்டுரை

வானம் முழுவதும் நட்சத்திரங்கள் மின்ன, நிலா ஒருபக்கம் அமைதியாய் ஒளி வீசியது. அவனோ, அந்த வானத்தை வெறித்துப் பார்த்தபடி பின் தோட்டது முற்றத்தில் அமர்ந்திருந்தான். அவன் மனதை ரணமாக்கியது, அன்று நடந்த அந்தச் சம்பவமே அவனை இந்த நிலமைக்கு கொண்டு வந்திருந்தது. ஆம் அவ்வாறு நிகழாவிடின் அவன் இவைகளை சாதித்திருக்க முடியாதே. அவன் பெயர் அஹமட். தரம் 12-இல் உயர்தரம் படித்து வருகிறான். தந்தை வெளிநாட்டில் இருப்பதால், வாழ்க்கையின் கஷ்டம் அவனுக்குத் தெரியவில்லை. தன்னை ஏழை என்று ஒருபோதும் எண்ணாமல், நண்பர்கள் முன்னால் உயர்வாகவே காட்டிக்கொள்ள பழகிவிட்டான். நிறமாறாத ஆடைகள், தரமான ஷூ, தினமும் ஒரு வண்ண பை, வாழ்க்கை அவனுக்கு ஒரு அசத்தலாய் பழகிப் போனது.

தாய், தங்கைகளின் வார்த்தைகளுக்கு மதிப்பளிக்காமல், "சுதந்திரம்" என்ற பெயரில், தந்தை நம்பிக்கையுடன் அனுப்பும் பணத்தை தேவையற்ற செலவுகளில் கரைத்துக்கொண்டிருந்தான். நண்பர்களுடன் பயணம், நினைத்த நேரத்தில் ஆடம்பர உணவகங்கள், அவனது வாழ்க்கை இவ்வாறே நீண்டு கொண்டே போனது.



தந்தை வீடு கட்ட அனுப்பிய பணம்,வீணான செலவுகளாக மாறிக் கொண்டிருந்ததைவிட, அவனுக்குத் தெரியாமலேயே தந்தையின் உயர்ந்த நம்பிக்கையே சிதைந்து கொண்டிருந்தது அவன் உணரவில்லை. வீட்டில் தாய், தங்கை உண்ணவும் உடுத்தவும் குறுகிய பணத்தையே கொடுத்தான். ஆனால் அவன், அவர்களோடு இருப்பதே இல்லை.

இவ்வாறு அவன் தனது பாதையில் போய்க்கொண்டிருந்தபோதுதான் அந்த நிகழ்வு நடந்தது. ஸ்டடிக்கு வேகமாக பைக்கில் வந்துகொண்டிருந்தபோது, திடீரென பைக் டயர் பஞ்சர். பைக்கை தள்ளிக்கொண்டே வந்தான். நண்பர்களை அழைத்தான். யாரும் அழைப்பை எடுக்கவில்லை.

கவிஞர் சஹ்னாஸ் பேகம், முதலைப்பாளி (இலங்கை)

கட்டுரை

கோபத்துடன் நடந்துகொண்டிருந்த அவன் கண்முன்னே அது நிகழ்ந்தது. அவனது வயதுடைய இன்னொருவன், வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல் பைக்கில் வந்தான். திடீரென பாதையை கடந்து ஓடிய நாயினால் பிரேக் பிடிக்க நேரம் இருக்க வில்லை. வேகம் குறையவில்லை. ஒரே நொடியில் பாதையோர மின் கம்பத்தில் மோதியது அந்த பைக். அந்த இடத்திலேயே உயிர் பிரிந்தது.அதை கண்ட மனிதர்கள் அவன் உயிர் பிரிந்ததை நினைத்து வருந்தவே இல்லை. வேகமாக வாகனத்தை ஓடாதே என பல தடவை சொல்லியும் கேளாமையின் விளைவு தான் இவை என சொல்லிக் கொண்டதை நேரில் பார்த்த அஹமட் உள்ளுக்குள் உறைந்து போனான். பயம் அவனை நடுங்கச் செய்தது.

"அதே நிலை... எனக்கும் வரலாம் அல்லவா?" என்று நினைத்தவுடன், அவன் உடல் முழுக்க துடித்தது. அந்த நொடியில் தான் தன் வாழ்க்கை, தன் செயல்கள், தந்தையின் நம்பிக்கை, தாயின் கண்ணீர் எல்லாமே அவன் கண்முன் வந்து நின்றன.

அப்போதிலிருந்து தான்.அவன் தன் தவறுகளை நினைத்து, வருந்தினான். முதல் முறையாக! உண்மையாய். அஹமட் அந்த சம்பவத்திற்குப் பிறகு மாற முயன்றான். முயற்சிதான். ஆனால் மாற்றம் எளிதல்ல. நண்பர்களோடு இருந்த பழைய சிரிப்புகள் இப்போது அவனுக்குப் பொருந்தவில்லை. ஆடம்பர உணவகங்கள், தேவையற்ற செலவுகள் என ஒதிங்கிக்கொண்டு அவன் மறுத்தான்.

"இவன் மாறிவிட்டான்..." "இப்போ எங்களுக்கு நேரம் தரமாட்டான்..."என்று சொன்ன வார்த்தைகளோடு நண்பர்கள் மெதுவாக விலகினர். அவன் தனியாகினான். ஆனால், உள்ளுக்குள் ஒரு நிம்மதி இருந்தது. வீட்டில் தங்கை அவனை நெருங்க பயந்தாள். முன்பு சத்தமாக பேசும் சகோதரன், எப்போதும் கோபமாய் இருக்கும் முகம் அவள் மனதில் இன்னும் பயமாய் இருந்தது.

அவன் பேச முயன்றான். அவள் ஒதுங்கினாள். அதைப் பார்த்து அஹமட் வலியடைந்தான். "நான் தான் இதை உருவாக்கினேன்" என்று புரிந்துகொண்டான். தாய் அவனை எதுவும் கேட்கவில்லை.

கவிஞர் சஹ்னாஸ் பேகம், முதலைப்பாளி (இலங்கை)

கட்டுரை

ஆனால், அவள் கண்களில் நம்பிக்கையுடன் கலந்த சந்தேகம் இருந்தது. அந்த இரவில்தான் அவன் முடிவு செய்தான்.

தந்தை ஆசையாய் கனவு கண்ட வீட்டை தான் கட்டவேண்டும். இனி வீணாக்கிய பணத்துக்கு பதில் சொல்ல வேண்டும். படிப்போடு சேர்த்து பார்ட் டைம் வேலைக்கு போனான். காலை கல்லூரி, மாலை வேலை, இரவு படிப்பு. கால்கள் வலித்தன. கைகள் சோர்ந்தன. ஆனால் மனம் முதன் முறையாக உறுதியாக இருந்தது. தந்தை அனுப்பும் பணத்தில் இனி அவன் உழைப்பும் கலந்தது. தங்கை மெதுவாக அருகில் வந்தாள். அவனைப் பார்த்து ஒரு நாள் சின்ன சிரிப்பு சிரித்தாள். அந்த சிரிப்பு அவனுக்குக் கிடைத்த மிகப் பெரிய சம்பளம்.

நண்பர்கள் போனார்கள். ஆனால், அவன் தன்னை மீட்டுக்கொண்டான். இப்போது அவன் வானத்தைப் பார்க்கிறான். முன்புபோல் வெறித்துப் பார்க்கவில்லை. எதிர்காலத்தை நம்பிக்கையோடு பார்க்கிறான். தன் படிப்போடு தங்கையின் படிப்பையும் கவனித்துக் கொண்டு, வீட்டின் தேவைகளையும் பார்த்துக் கொண்டு அஹமட் முன்னேறினான். பகல் கல்லூரி, மாலை வேலை, இரவு கணக்குகள் வீட்டுக்கான கனவுகள் அவன் கைகளில் வடிவம் எடுத்தன. சின்ன சின்ன சேமிப்புகள், நிறைய உழைப்புகள் அந்த இடத்தில் ஒரு வீடு எழுந்தது. சுவருக்குச் சுவர் அவனது தவறுகளும் மாற்றங்களும் கலந்து இருந்தன.

தாய், தங்கை? வீட்டின் பின்புறம் சின்ன சின்ன காய்கறித் தோட்டம் நட்டனர்.மிளகாய், கத்தரிக்காய், கீரை அவை வெறும் பயிர்கள் அல்ல; அவனுக்குக் கொடுத்த ஆதரவும், நம்பிக்கையும். காலை அவன் கிளம்பும் போது அம்மா நீர் ஊற்றுவாள். மாலை அவன் திரும்பும் போது தங்கை புன்னகையோடு பயிர்களை காட்டுவாள். அந்த வீடு செங்கற்களால் மட்டும் இல்லை ஒற்றுமையால் கட்டப்பட்டது.

அவனைப் பற்றி அனைத்தையும் அறிந்த தந்தை, வெளிநாட்டிலிருந்து அந்த வீட்டைப் பார்த்தபோது கண்கள் நனைந்தன. "என் நம்பிக்கை வீணாகவில்லை..." என்ற பெருமிதம் அவர் முகத்தில் தெரிந்தது.

கவிஞர் சஹ்னாஸ் பேகம், முதலைப்பாளி (இலங்கை)

பணம் அனுப்பிய கைகள் இப்போது ஆசீர்வாதம் தரும் கைகளாக மாறின.

அஹமட் வானத்தை மீண்டும் பார்த்தான். இப்போது அதில் குற்ற உணர்வு இல்லை. பயம் இல்லை. நம்பிக்கையின் ஒரு புதிய நிலா முழுமையாய் ஒளிர்ந்தது. நல்ல மனங்களோடு இருந்தால் செயல் பிழைப்பதில்லை என உணர்ந்தாலே போதும்



கவிஞர் சஹீனாஸ் பேகம், முதலைப்பாளி (இலங்கை)

## பிறப்பும் கல்வியும்



கார்மேகக் கோனார் 1889 ஆம் ஆண்டு ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மேலச் செம்மனூர் கிராமத்தில் பிறந்தார். இவரது தந்தை மாரியப்பக் கோனார். மதுரையில் பள்ளிப் படிப்பை முடித்த இவர், மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் செந்தமிழ்க் கல்லூரியில் பயின்று 'பாண்டித்தியம்' தேர்வில் முதன்மையாகத் தேறினார்.

## பணிவாழ்வு

கல்வி பயின்ற அதே செந்தமிழ்க் கல்லூரியிலேயே தமிழ்ப் பேராசிரியராகத் தனது பணியைத் தொடங்கினார். பின்னர், மதுரை அமெரிக்கன் கல்லூரியில் தமிழ்த் துறைத் தலைவராக நீண்ட காலம் பணியாற்றினார். இவரிடம் பாடம் கற்ற மாணவர்கள் பின்னாளில் சிறந்த தமிழறிஞர்களாகத் திகழ்ந்தனர்.

## இலக்கியப் பணிகள்




பேராசிரியர்
திரு. ஆ. கார்மேகக் கோனார் அவர்கள்

இவர் செய்யுள் இயற்றுவதிலும், கடினமான இலக்கியங்களுக்கு எளிய முறையில் உரை எழுதுவதிலும் வல்லவர். இவரது உரைநடைத் திறன் பாராட்டுக்குரியது.

உரை நூல்கள்: சங்க இலக்கியங்கள் மற்றும் நீதி நூல்களுக்குத் தெளிவான உரை எழுதியுள்ளார். குறிப்பாக, 'கார்மேகக் கோனார் உரை' மாணவர்கள் மத்தியில் மிகவும் பிரபலம்.

திரு அ. வில்சன், இதழாசிரியர்

**படைப்புகள்:**




- அறிவு நூல் திரட்டு (2 தொகுதிகள் - உரைநூல்)
- ஆபுத்திரன் அல்லது புண்ணியராஜன் (உரைநூல்)
- இதிகாசக் கதாவாசகம்,( 2 தொகுதிகள்)
- ஐங்குறு நூற்றுச் சொற்பொழிவுகள்
- ஒட்டக்கூத்தர்கண்ணகி தேவி
- காப்பியக் கதைகள்
- கார்மேகக் கோனார் கட்டுரைகள்
- கார்மேகக் கோனார் கவிதைகள்
- செந்தமிழ் இலக்கியத்திரட்டு I
- பாலபோத இலக்கணம்
- மலைபடுகடாம் ஆராய்ச்சி
- தமிழ்ச்சங்க வரலாறு (கட்டுரை)
- நல்லிசைப் புலவர்கள் (உரைநூல்)
- மதுரைக் காஞ்சி
- மூவருலா ஆராய்ச்சி
- தமிழ்மொழியின் மறுமலர்ச்சி

**சிறப்புகள்**

சொற்பொழிவு: மேடைப் பேச்சில் வல்லவர். இலக்கிய நயங்களை நகைச்சுவையோடும், தெளிவோடும் எடுத்துரைப்பதில் இவருக்கு நிகர் இவரே. மதுரைத் தமிழ்ச் சங்கம்: பாண்டித்துரைத் தேவர் தோற்றுவித்த மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் செயல்பாடுகளில் முக்கியப் பங்காற்றினார். அதன் 'செந்தமிழ்' இதழில் பல ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளார். சமூகப் பணி: யாதவ குல முன்னேற்றத்திற்காகவும், கல்வி வளர்ச்சிக்காகவும் பாடுபட்டவர்.

**மறைவு**

தமிழுக்கும் மாணவர்களுக்கும் பெரும் தொண்டாற்றிய கார்மேகக் கோனார் அவர்கள் 1957 ஆம் ஆண்டு இயற்கை எய்தினார். மதுரையில் இன்றும் இவரது பெயரில் 'கார்மேகக் கோனார் தெரு' இருப்பது இவரது புகழுக்குச் சான்றாகும்.

திரு அ.வில்சன், இதழாசிரியர்

நாளை நமதே

# கடந்த காலம் நமக்கு பாடமாக இருக்கவேண்டுமே தவிர, பாரமாக இருக்க நாம் அனுமதிக்கக்கூடாது

அகர முதல இலக்கியப் பேரவை

அகமும் தமிழே முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில்,

அகர முதல செய்திக்குழு   அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு   சிவம் அறக்கட்டளை


தொடர்பிற்கு :
9597887847
8870884969




## அகர முதல இலக்கியப் பேரவை


Aagaramuthalaa  www.aagaramuthala.com  aagaramuthala@gmail.com